யாருக்கெல்லாம் வீடுகள், மனைகள் தேவைப்படுகிறதோ, அவர்கள் கட்ட வேண்டியது 1½ இலட்சம் ரூபாய். ஆக, மத்திய அரசிடமிருந்து 1½ இலட்சம் ரூபாயைப் பெற்று, ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து 1½ இலட்சம் ரூபாயைப் பெற்று, மாநில அரசு தன்பங்காக 7½ இலட்சம் ரூபாயை வழங்கி, வீடுகளை கட்டி, மக்களுக்கு அளித்து வருகிறது. இதுவரை, இவ்வாறு 4½ இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னிலை மாநிலமாக இருக்கிறது என்பதைச் சாதனையாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

புதிய நூலகம்

***12904—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் ஒன்றியம், மேலப்புலியூர் கிராமத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒன்றியம், மேலப்புலியூர் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்கப்பட்டு, ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணாள வந்த மாதரசி, மக்கள்குலம் வாழ வந்த பெண்ணரசி, எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றும் வெற்றி, இன்று நண்பகல் பொழுதிலும் வெற்றி, நாளையும் வெற்றி, இப்படி வெற்றி மேல் வெற்றி என்று தொடர் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் எங்கள் சாதனை முதல்வர் சரித்திர நாயகர், மாட்சிமை பொருந்திய தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலப்புலியூர் கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சாதனைகள் படைத்திருக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பெருமகனாருக்கு நன்றியினைச் சொல்லி, மேலப்புலியூரில் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பகுதிநேர நூலகத்தை, ஊர்ப்புற நூலகமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதை உடனடியாகக் கனிவோடு பரிசீலித்து, ஊர்ப்புற நூலகம் அமைப்பதற்குத் தேவையான 5 சென்ட் நிலத்தைக் கண்டறிந்தவுடன் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுகளுக்கான தேதி, தேர்வு முடிவுகளுக்கான தேதி ஆகியவற்றை முன்கூட்டியே அறிவித்து, மாணாக்கர்களுக்கிடையே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக* ranking system *என்பதை ஒழித்து, நவீன முறையிலே நூலகத்தை சிறப்பு வழியிலே மின்னாக்கம் செய்வதற்கு ரூபாய் 2 கோடி நிதியை ஒதுக்கி,*

2018 ஜூன் 14]

பேரறிஞர் பெருந்தகை அண்ணா நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, கல்வித் துறையிலே யுக புரட்சியை நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மேலப்புலியூர் நூலகம் தரம் உயர்த்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்குத் தேவைப்படும் 5 சென்ட் நிலத்தை அரசின் சார்பில் பெற்றுத் தருகிறேன் என்ற உத்தரவாதத்தை வழங்குகிறேன். பெரம்பலூர் நகராட்சி என்பது வளர்ந்து வருகிற ஒரு மாவட்டத்தினுடைய தலைநகர் ஆகும். அங்கே அரனாரை கிராமத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். 2 ஆயிரத்திற்கும் அதிகமான படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். நகராட்சியின் சார்பில் ஒரு நூலகக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அரனாரை கிராமத்தில் பகுதிநேர நூலகத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் அரசியலிலே ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒவ்வொரு குடும்பத்திலும் நூலகம் இருக்க வேண்டுமென்று விரும்பினார். அதனடிப்படையில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், கோட்டூர்புரத்தில், ஆசியாவிலேயே பெரிய நூலகம் கட்டப்பட்டு, இன்றைக்கு அதை நீங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதேபோல, 2006–2011–ல் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்தபோது, ஊரக வளர்ச்சித் துறையை*

தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சமயத்தில், தமிழகத்தில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 12,524 ஊராட்சிகளிலும் நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டன. அந்த நூலகங்களுக்கெல்லாம் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இப்போது அந்த நூலகங்கள் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரோடு கலந்து பேசி, அந்த நூலகங்களையெல்லாம் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தால், அங்கிருக்கின்ற ஏழையெளிய மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அந்த நூலகங்களுக்குச் சென்று, பெரிதும் பயனடைவார்கள். எனவே, அவற்றை செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித் துறை இலாக்காவும் அவர் வசமிருந்தது. எனவே, நூலகத்திற்கு வழங்க வேண்டிய Cess Fund–ஐ அப்படியே மாற்றி வழங்கியிருப்பார்கள். அவ்வாறு வழங்குவது சுலபம். தற்போது, நூலகத்திற்கு உடனடியாக வழங்க வேண்டிய Cess Fund கிட்டத்தட்ட 128 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதை படிப்படியாக வழங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது துணை முதலமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உள்ளாட்சித் துறையை தன் வசம் வைத்திருந்ததால், உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற நிதிகளை நூலகத்திற்காக உடனடியாக வழங்கியிருக்கக் கூடும். ஆகவே, உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். இதைப்பற்றி நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசியிருக்கிறோம். அனைத்து ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற நூலகங்களை எப்படிப் பயன்பட்டிற்குக் கொண்டு வரலாம் என்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

2018 ஜூன் 14]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்வியறிவு அதிகமான மாவட்டமாக இருந்தாலும், அங்குள்ள முக்கியமான பகுதிகளில் நூலகங்கள் இல்லாத நிலை இருக்கிறது. குறிப்பாக, சைமன் காலனி ஊராட்சியிலிருக்கக்கூடிய வாணியக்குடி பகுதியில் ஒரு புதிய நூலகம் அமைக்கவும், வாள்வச்சகோஷ்டம் பேரூராட்சியில் உள்ள பள்ளியாடி பகுதியில் ஒரு புதிய நூலகம் அமைக்கவும், அந்த நூலகத்தை* digital *வடிவில் அமைக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பகுதிநேர நூலகங்கள் அமைப்பதற்கு 200 உறுப்பினர்கள் தேவைப்படுவதோடு, அதற்கு ரூ.30/– வீதம் நிதியும் செலுத்தப்பட வேண்டும். மேலும், பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான வாடகைக் கட்டடங்களையும் உறுப்பினர் பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு இடங்களை உறுப்பினர் பெற்றுத் தரும்பட்சத்தில், உடனடியாக அங்கே நூலகங்கள் அமைக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

தரம் உயர்த்துதல்

***22306—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கருங்கல்லிலுள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?